# அறிவிப்பு

இந்த பயிற்சி அல்லது பாடக் கோப்புகளில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் கல்வி பயன்பாட்டிற்கு மட்டுமே. இந்த பயிற்சி அல்லது பாடக் கோப்புகளில் உள்ள தகவல்களை எந்த ஒரு குறிப்பிட்ட பங்கினையும் வாங்குவதற்கோ அல்லது விற்பதற்கோ அளிக்கப்படும் சிபாரிசுகளாக கருதக்கூடாது. மேலும் இந்த தகவல்களை கொண்டு கமாடிட்டி அல்லது கரன்சி அல்லது பங்குசந்தையில் முதலீடு செய்வதற்கோ அல்லது வர்த்தகம் செய்வதற்கோவான பரிந்துரைகளாகவோ அல்லது சலுகையாகவோ கூட கருதக்கூடாது. இந்த தகவல்களின் மூலம் ஏதேனும் பாதிப்போ அல்லது இழப்போ அல்லது நஷ்டமோ ஏற்பட்டால் அதற்கு கிஃப் பாஸ் அகாடெமி எந்த வகையிலும், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொறுப்பாகாது. இந்த பகுதியில் வழங்கப்பட்டுள்ள வழிமுறைகள் அல்லது கருத்துக்களைக் கொண்டு செயல்பட்டு வர்த்தகர்களுக்கு ஏதேனும் இழப்பு ஏற்பட்டால் அதற்கான முழு பொறுப்பும் வர்த்தகர்களையே சேரும், எவ்வித இழப்பிற்கும் எங்கள் நிறுவனத்தை தொடர்புப்படுத்த முடியாது. இனி வரும் பாடக்கோப்புகளையும் மற்றும் எங்கள் நிறுவனம் உங்களிடம் பகிர்ந்து கொள்ளும் அனைத்து அனுபவங்களையும் அறிவுக் தகவல்களாக மட்டுமே கருதி பொறுமையுடன் ஆராய்ந்து உங்கள் முடிவுகளை நீங்களாகவே எடுக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

# வர்த்தகரே கவனியுங்கள்..!



எத்தனையோ வர்த்தகங்கள் இவ்வுலகில் இருந்தாலும் அதில் தனிப்பெரும் சிறப்பு வாய்ந்தது பங்குவர்த்தகம் எனலாம். ஒருவர் பல நோக்கங்களுடன் இவ்வர்த்தகத்தில் நுழைவது உண்டு. முழுநேர வர்த்தகராகவோ, முதலீட்டாளராகவோ அல்லது வாய்ப்புகள் கிடைக்கும் போது மட்டுமே பயன்படுத்துபவராகவோ ஒருவர் தன் நேரத்திற்கும் வசதிக்கும் ஏற்றார்போல் பங்குவர்த்தகத்தை பயன்படுத்திக் கொள்ளலாம். இப்படிப்பட்ட பங்குவர்த்தகத்தின் சாதங்கள் ஏராளம். அவை :

## வீட்டில் இருந்தபடியே வேலை செய்யும் வாயப்பு



ஆன்லைன் பங்குவர்த்தகம் வந்த பிறகு ஒரு கம்பியூட்டரும் இண்டெர்நெட்டும் இருந்தாலே எவர் வேண்டுமானாலும் வீட்டில் இருந்தபடியே வர்த்தகம் செய்ய முடியும். குடும்பத்தினருடன் அதிக நேரம் செலவிட வேண்டும் என விரும்பும் பலருக்கு இது ஒரு இனிப்பான செய்தியேயாகும். பங்குவர்த்தகம் அளிக்கும் பல சாதகங்களில் இது ஒரு முக்கியமான சாதகம் எனலாம்.

# குறைந்த செலவுகள்




மற்ற தொழில்களை போல் அல்லாது பங்குவர்த்தகத்திற்கு என செலவிடப்படும் செலவுகள் மிகக்குறைவே. உங்கள் பங்குதரகருக்கு நீங்கள் அளிக்கும் கமிஷன் தொகையையும், அரசு வரியையும் தவிர வேறு கட்டாய செலவுகள் என்பது பங்குவர்த்தகத்தில் கிடையாது.

# சில நிமிடங்களிலேயே லாபம் ஈட்டும் வாய்ப்பு




பங்கின் விலைகளானது வேகமாக நகரக்கூடியவை என்பதால் சரியான ஆய்வுகளைச் செய்து நீங்கள் வர்த்தகம் செய்யும் பங்குகளானது சில நிமிடங்களிலேயே லாபங்களை அள்ளித்தரும் திறன் கொண்டது.

# நாம் விரும்பிய நேரத்தில் வேலை செய்யலாம்



யாருடைய தயவும் இல்லாமல் ஒருவர் நினைக்கும் நேரத்தில் சந்தை செயல்படும் நேரங்களில் எப்போது வேண்டுமானலும் சந்தையில் வர்த்தகம் செய்யலாம்.

அதேப்போல் பங்குவர்த்தகம் செய்வதற்கு எந்தவொரு கல்வி தகுதியோ முன் அனுபவமோ தேவையில்லை.

இவை போன்ற பல சாதங்கள் பங்குவர்த்தகத்திற்கு இருந்தாலும் இதற்குள் நுழைவதற்கு முன்னால் பல விவரங்களை தெரிந்துக்கொண்டு அதன் பின் பொறுமையாகத்தான் பங்குவர்த்தகத்தில் ஈடுபட வேண்டும் நீங்கள் தெரிந்துக்கொள்ள வேண்டிய பல முக்கியமான அடிப்படை விஷயங்கள் எல்லா புதிய வர்த்தகர்களும் பங்குவர்த்தகத்தில் நுழையும் போது பல மனக்கணக்குகளுடன் நுழைவர்கள். அவற்றில் சிலவற்றை இனி காண்போம்.

# முதலில் பத்தாயிரம் அதன்பின் பல ஆயிரம்

பங்குவர்த்தகம் செய்ய வேண்டும் என நினைக்கும் பலர் முதலில் நினைப்பது இதைத்தான். அதாவது பங்குசந்தையை பற்றி எதையுமே முழுவதாக தெரிந்துக்கொள்ளாமல் முதலில் ஒரு ஐயாயிரத்தையோ பத்தாயிரத்தையோ போட்டு பார்ப்போம் நல்ல லாபம் வந்தால் அதன் பிறகு அதிக பணம் போடலாம் என பங்குவர்த்தகம் செய்ய ஆரம்பிப்பவர்கள் பலர். உண்மை என்னவென்றால் இதில் 90 சதவீதம் பேர் முதலில் போடும் சில ஆயிரங்களை இழந்ததுதான் அதிகம். குறைந்த பணத்தை முதலில் முதலீடு செய்து அதன்பின் சிறிது சிறிதாக முதலீட்டு தொகையை அதிகரித்துக் கொள்ளலாம் என ஒருவர் நினைப்பதில் தவறில்லை. ஆனால் ஒரு தொழிலை செய்வதற்கு முன் அதற்கு தேவையான அறிவு மற்றும் தொழில்நுட்பங்கள் போன்றவைகளை தெரிந்து கொள்வதிலும் பரிசோதித்து பார்ப்பதிலும்தான் உங்கள் பணத்தை முதலில் செலவிட வேண்டும்.

அப்படி செய்யாமல் ஒரு தொழிலை பற்றி சரியாக புரிந்துக்கொள்ளாமல் அதை எப்படி செய்யனும், எப்படி செய்தால் லாபம் வரும் என்கிற எந்த ஒரு விவரத்தையும் தெரிந்துக்கொள்ளாமல் நாம் அந்த தொழிலில் முதலீடு செய்கின்ற பணம் சிறியதோ பெரியதோ நஷ்டம் தான். இப்படி பங்குசந்தையை பற்றி தெளிவாக தெரிந்துக்கொள்ளாமல் பங்குசந்தையில் வர்த்தகம் செய்ய துவங்கி சில மாதங்களுக்கு பிறகு, தான் நஷ்டம் அடைந்து கொண்டிருக்கிறோம் என்பதே தெரியாமல் மேலும் மேலும் பணத்தை பங்குவர்த்தகத்தில் போட்டு மாட்டிக்கொண்டு அதை விட்டு வெளியேயும் வரமுடியாமல் விட்ட பணத்தை திரும்ப சம்பாதிக்கவும் முடியாமல் திருதிரு வென்று முழிப்பவர்கள் பலர்.



ஆதலால் பங்குசந்தையில் நுழைவதற்கு முன்னால் அதன் சாதகங்கள், பாதகங்கள், நன்மைகள், ஆபத்துகள் போன்ற எல்லா விவரங்களையும் முழுவதாக தெரிந்துக்கொண்டு ஒரு தெளிவான வர்த்தக திட்டத்தை வகுத்துக் கொண்டு, உங்கள் பணத்தை முதலீடு செய்யாமலேயே செய்தது போல் நினைத்துக்கொண்டு உண்மையான சந்தையின் முன் அமர்ந்து ஒரு பங்கை வாங்கியது போலும் விற்றது போலும் காகிதத்தில் எழுதி பயிற்சி எடுத்து அதில் வெற்றி பெற்றபின் நிஜ பங்கு வர்த்தகத்தை துவங்குவதுதான் புத்திசாலித்தானம்.

## பட்டபின் கல்வி



என்னதான் சொன்னாலும் செய்வதைத்தான் செய்வேன் என்று எந்த ஒரு விஷயத்தையும் கற்றுக்கொள்ளாமல் பணத்தை இழந்துவிட்டு அதன்பின் இனிமே பங்குவர்த்தகம் செய்தால் அதைப்பற்றி முழுவதாக கற்றுக்கொண்டுதான் செய்வேன் என தாமதமாக யோசித்து செயல்படுவதைவிட முன்கூட்டியே பங்குவர்த்தகம் சம்பந்தபட்ட விவரங்கள், ஆய்வுகளை செய்வதற்கான பயிற்சிகள் மற்றும் தொழில்நுட்பங்கள் போன்ற அனைத்தையும் முடிந்த வரை கற்று, அதன்பின் உங்கள் வர்த்தகத்தை தொடருங்கள்.

## பங்குவர்த்தகம் ஒரு டைம் பாஸா?



நேரத்தை கடத்துவதற்காக பங்குவர்த்தகத்தை தேர்ந்தெடுப்பது நல்லது இல்லீங்க. பங்குவர்த்தகம் ஒரு கருத்தார்ந்த தொழில். இந்த தொழிலை விளையாட்டுத்தனமா கையாளாதீங்க. மிகுந்த கவனத்தோட பொறுமையா இருந்தாதான் பங்குவர்த்தகத்தில் ஜெயிக்க முடியும். அதை மீறி இந்த வர்த்தகத்தை ஒரு டைம் பாஸாக செய்யத்துவங்கியவர்கள் பலர் இதில் தொடர்ந்து நீடித்தது இல்லை என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்க.

## கோடீஸ்வரன் கனவு



கனவு காண்பது தவறில்லைதான் ஆனால் ஒரு நியாயமே இல்லாமல் கனவு காணாதீர்கள். பங்குசந்தையில் சில நிமிடங்களிலேயே லாபம் சம்பாதிக்கவும் முடியும் அதை இழக்கவும் முடியும். சம்பாதிக்கப் போகும் லாபத்தை மட்டுமே நினைத்து சில மாதங்களிலேயே கோடீஸ்வரன் ஆகி விடலாம் என கனவு கண்டு எங்கேயாவது கடன்வாங்கி காசை போட்டு மாட்டிக்காதீங்க. நீங்கள் செய்யும் முதலீட்டில் ஒரு மாதத்திற்கு 5 சதவீதம் சம்பாதித்தாலே அது மிகப்பெரிய விஷயம். ஒரு வருடத்தில் உங்களுடைய முதலீடானது 60 சதவீதம் உயர்ந்து லாபத்தை கொடுக்கும் என்பதை புரிந்துக்கொள்ளுங்கள். அதைவிட்டுவிட்டு ஒரே அடில ஒரு புடி புடிச்சிடலாம்னு நினைத்து சூதாட்டம் போல விளையாடாதீங்க.

## நான் சொல்கிறேன் நாளைக்கு Market Up



எதை ஒழிக்கிறோமோ இல்லையோ நம் கர்வத்தை ஒழிக்க வேண்டும் என எல்லோருக்கும் தெரியும். அதுவும் குறிப்பாக பங்குசந்தையில் கர்வம்தான் பெரிய எதிரி. ஏனென்றால் என்னுடைய கணக்குப்படி நாளைக்கு சந்தை உயரும் பாருங்களேன் என பலர் சொல்லி கேள்விபட்டிருப்போம். சரிங்க உங்க கணக்குதான் என்னன்னு கேட்டா அதற்கு அவர் நான் சொல்றேன்ல நீங்க வேணும்னா பாருங்க நாளைக்கு சந்தை ஏறும் என காரணமேயில்லாமல் அவருக்கு மனதில் தோன்றுகிற விஷயத்தை அவராகவே நம்பிக்கொண்டு உறுதியாக இருப்பார்.

நீங்க சந்தையோட நகர்வை கணிக்க முயற்சிக்கின்றது தவறில்லைதான் . ஆனால் எந்த அடிப்படையில் கணிக்க முற்படுகிறீர்கள் என்பதுதான் பங்குசந்தையில் மிக முக்கியமான விஷயம். மனதில் தோன்றியதை எல்லாம் நம்பி நம் விருப்பம் போல் பங்குகளை வாங்குவதும் விற்பதும் பங்குவர்த்தகத்தில் மிகவும் ஆபத்தானதுங்க. நீங்க வாங்கிய பங்கு இறங்க துவங்கினால் ஒரு நஷ்டத்தடுப்பை நிர்ணயித்து வெளியே வந்துவிடுங்கள். அப்படி செய்யாமல் எவ்வளவு போய்விடும் பார்த்துவிடலாம் என சந்தையோடு போட்டி போடுவது நல்லது இல்லீங்க. பல பெரும் முதலீட்டாளர்களும், நிறுவனங்களும், அன்னிய முதலீடுகளும், பங்குசந்தையில் கலந்திருப்பதினால் பங்குசந்தைக்கு பலம் அதிகமுங்க. இதை புரிந்துக்கொள்ளாமல் சந்தைக்கு எதிராக சண்டைபோட நினைத்தீர்களேயானால் ஜெயிப்பது சாத்தியம் இல்லைங்க.

# லாபம் நம் எண்ணம், நஷ்டம் ஒரு அங்கம்



எந்த ஒரு தொழிலிலும் நஷ்டம் என்கிற வார்த்தையை கேட்கவே விரும்பமாட்டோம் . ஆனால் பங்குவர்த்தகத்தில் நஷ்டம் என்பது ஒரு அங்கம் என்பதை நீங்கள் தெளிவாக புரிந்துக்கொள்ள வேண்டும். இதற்கு காரணம் என்னவென்றால் சந்தையானது மேலும் கீழுமாய் மாறி மாறி நகரக்கூடியது. பங்குசந்தை, கமாடிட்டி சந்தை, கரன்சி சந்தை போன்ற அனைத்து சந்தையிலும் ஏற்ற இறக்கங்களானது தினமும் நிகழக்கூடிய ஒன்றுதான். நீங்கள் தினசரி வர்த்தகம் செய்வதற்காக கமாடிட்டி சந்தையில் தங்கம் வாங்கினால் அடுத்த நொடியிலேயே அதன் விலையானது மேலேயும் செல்லலாம் அல்லது கீழேயும் இறங்கலாம். ஆனால் இந்த ஏற்ற இறக்கங்களை பகுப்பாய்வின் உதவியோடு சரியாக கணித்து லாபம் ஈட்ட முடியும்.

ஆனால் எவ்வளவுதான் துல்லியமாக கணித்தாலும் பங்கு வர்த்தகத்திற்கு ஒரு முறையாவது நஷ்டம் வரத்தான் செய்யும். அதனால் இந்த வர்த்தகத்தில் நஷ்டம் என்பது சாதாரணம் என்பதை தெளிவாக புரிந்துக்கொண்டு நஷ்டங்களின் எண்ணிக்கையை குறைப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். அதாவது பத்து முறை நஷ்டம் வரலாம் ஆனால் இந்த நஷ்டமானது உங்கள் அனைத்து லாபத்தையும் அழிக்கின்ற விதமாகவோ அல்லது ஐந்து முறைக்கும் மேற்பட்டோ நஷ்டங்களை வரவிடாமல் நம் முதலீட்டை காத்துக்கொள்வதுதான் மிகவும் இன்றியமையாதது.

உங்கள் நஷ்டத்தின் எண்ணிக்கையை குறைக்க குறைக்க உங்களின் லாபம் உயர்ந்துக் கொண்டே போகும். இதை தினசரி வர்த்தகத்தின் அடிப்படை எனலாம். நஷ்டத்தின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் என்றால் தொழில்நுட்ப பகுப்பாய்வு மற்றும் அடிப்படை பகுப்பாய்வில் கற்று தேர்ந்தவராக இருக்க வேண்டியது அவசியம்.

# விட்டதை பிடி வர்த்தகம்...

பங்குவர்த்தகத்தில் விவரம் இல்லாமல் நுழைந்தோ அல்லது லாபம் அளிக்காத ஒரு வர்த்தக திட்டத்தை பயன்படுத்தியோ, நீங்கள் சிறியதாக ஒரு தொகையை இழந்துவிட்டீர்கள் என்றால் கவலை கொள்ளாதீர்கள். உங்கள் பங்குவர்த்தகத்தை சிறிய நஷ்டத்திலேயே நிறுத்திவிட்டு அதில் இருந்து வெளிவந்து பகுப்பாய்வு யுத்திகளை கற்று பயிற்சி எடுத்து, நீங்கள் முன்னர் செய்த தவறுகளை திருத்திக்கொண்டு உங்கள் வர்த்தக திட்டத்தை மேலும் மெருகேற்றி அதன்பின் உங்கள் வர்த்தகத்தை துவங்குகள். அது கண்டிப்பாக உங்களுக்கு பயன் தரும். அதைவிட்டுட்டு விட்டத்தை பிடிக்கிறேன் என்று சொல்லி செய்த தவறையே திரும்ப திரும்ப செய்து இருப்பதையும் விட்டு விடாதீங்க.



# நம்மை அறிந்தால் நம் வர்த்தகத்தை அறியலாம்



முதலில் நாம் நம்மை புரிந்துக்கொள்ள வேண்டும் என்பது வாழ்க்கையில் எல்லா விஷயத்திற்கும் பொருந்தும். அதேப்போல பங்குவர்த்தகத்திலும் நாம் யார், நம் வசதி என்ன, நம் பண பலம் என்ன, நம் மன உறுதி என்ன போன்ற விவரங்களை நாம் தெளிவாக அறிந்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் அதிகம் டென்ஷன் ஆகக்கூடிய ஒருவருக்கு தினசரி வர்த்தகம் கண்டிப்பாக பொருந்தாது. அதைப்போல் பொறுமையில்லாதவருக்கு நீண்ட நாள் முதலீட்டு வகைகள் துளியும் பொருந்தாது. இதுபோல் ஒவ்வொரு மனிதருடைய மனநிலையை பொருத்துதான் அவர் தொழிலை தேர்ந்தெடுக்க வேண்டும். அதனால் உங்களுடைய மனநிலையையும் பணநிலையையும் சரியாக புரிந்துக்கொள்ளாமல் பங்குவர்த்தகத்தில் ஈடுப்படாதீங்க.

நாம் எவ்வளவு தொகையை வைத்துள்ளோம் அதில் எவ்வளவு தொகையை பங்குவர்த்தகத்திற்கு பயன்படுத்தப் போகின்றோம்? அதேப்போல் எவ்வளவு லாபம் நமக்கு கிடைத்தால் போதுமானது, எந்த அளவுக்கு நஷ்டத்தை நம்மால் தாங்க முடியும்? போன்ற எல்லா கேள்விகளையும் நமக்கு நாமே கேட்டுக்கொண்டு ஒரு சரியான இலக்கை நிர்ணயித்துக் கொண்டு அதற்கு பின்தான் பங்குவர்த்தகத்தில் நுழைய வேண்டும். நுழைந்ததற்கு பின்னால் நம் இலக்குகளில் இருந்து மாறாமல் ஒழுக்கத்துடன் அதைபின்பற்ற வேண்டும். எந்த அளவிற்கு நம்மை நாமே புரிந்துக்கொள்கிறோமோ அதைப் பொறுத்து எம்மாதிரியான வர்த்தகத்தை நாம் செய்ய வேண்டும் என்பதையும் தானாகவே புரிந்துக் கொள்ளலாம்.

# குழப்பமில்லா மனநிலை



பங்குசந்தையில் பெரும் பங்கு வகிப்பது வர்த்தகர்களின் மனநிலைதான். ஏனென்றால் அடிப்டையில் வலிமையாக இருக்கும் ஒரு பங்கானது கீழ்நோக்கி இறங்குவதும், அடிப்படையில் வலுவில்லாத ஒரு பங்கு திடீரென மேல் நோக்கி ஏறுவதும் வர்த்தகர்களோட மனநிலையின் பிரதிபலிப்புதான். அது ஒரு பக்கம் இருந்தாலும், வர்த்தகம் செய்யும் போது நம் மனநிலையானது மிகுந்த கட்டுக்கோப்புடன் இருக்க வேண்டும். ஏனென்றால் பங்குவர்த்தகமானது பலரை பெரிய கோடிஸ்வரர்களாக வளர்த்தும் உள்ளது ஒன்றும் இல்லாதவர்களாக மாற்றியும் உள்ளது. பங்குவர்த்தகத்தை முறையாக செய்யாமல் அதைவிட்டு வெளியேறவும் முடியாமல் அதற்கு அடிமையாகி தங்களுடைய அனைத்து முதலீடுகளையும், மன நிம்மதியையும் தொடர்ந்து இழந்துக் கொண்டிருப்பவர்களும் பங்குசந்தையில் உண்டு. அதனால் முன்பே கூறியது போல் உங்களுக்கு தகுந்த வர்த்தக முறையை தேர்ந்தெடுத்துக் கொண்டு சரியானவர்த்தக திட்டத்தை உருவாக்கி அத்திட்டத்தை ஒழுக்கத்தோடு பின்பற்றி எப்போதுமே குழப்பம் இல்லாமல் மனவலிமையோடு பங்குவர்த்தகத்தில் ஈடுப்படுங்கள்.

## நல்லது எது?




- உபரிப் பணத்தை மட்டுமே முதலீடு செய்வது நல்லது.
- உங்கள் முதலீடுகளை 4 பாகங்களாக பிரிந்து முதலிடு செய்வது நல்லது.
- பங்குசந்தையின் அனைத்து கருவிகளையும் (ஈக்விட்டி, ப்யூச்சர்ஸ் & ஆப்சன்ஸ்) சரியாக புரிந்துக்கொண்டு தேவைக்கேற்றார் போல் அவைகளை தேர்ந்தெடுத்து பயன்படுத்தி வர்த்தகம் செய்வது நல்லது.
- இலக்கு விலை மற்றும் நஷ்டதத்தடுப்பு விலையினை முன்கூட்டியே நிர்ணயம் செய்து வர்த்தகம் செய்ய கற்றுகொள்வது நல்லது.
- சந்தை எவ்வழியில் செல்கிறதோ அவ்வழியிலே செல்வது நல்லது.
- நம் சக்திக்கு மேற்பட்ட அதிகப்படியான வர்த்தகத்தில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது.
- புரளிகளை நம்பி வர்த்தகம் செய்வதை தவிர்ப்பது நல்லது.
- ஒரே துறையில் உள்ள பங்குகளில் மட்டுமே அனைத்து பணத்தையும் முதலீடு செய்வதை தவிர்ப்பது நல்லது.
- குறைந்த விலை பங்குகள் என்றும் ஆபத்தானவை, அதனினை அதிகம் வாங்குவதை தவிர்ப்பது நல்லது.
- ஒரு பங்கின் விலை இறங்கி கொண்டிருக்கும் போது, சிறிய இறக்கத்திலேயே அதை மேலும் மேலும் வாங்கி ஆவரேஜ் செய்வதை தவிர்ப்பது நல்லது.
- ஒரே நேரத்தில் அளவிற்கு அதிகமான பல பங்குகளைக் கொண்டு வர்த்தகம் செய்வதை தவிர்ப்பது நல்லது.
- மனம்போன போக்கில் வர்த்தகம் செய்யாமல் என்றுமே ஒரு சரியான காரணத்தோடு மட்டுமே வர்த்தகம் செய்வது மிகமிக நல்லது.

# வெற்றி உங்களுக்கே..!



பங்குவர்த்தகத்தில் ஆபத்துகள் இருந்தாலும் அதை சரியான முறையில் கையாண்டால் பங்குவர்த்தகம் உங்கள் வாழ்க்கைக்கும் ஒளிகாட்டும் வழி எனலாம். ஆதலால் உங்களால் இயன்றவரை அனைத்து விவரங்களையும் சேகரித்து, அதை பொறுமையுடன் கற்று, அடிப்படை பகுப்பாய்வு மற்றும் தொழில்நுட்ப பகுப்பாய்வுகளில் பயிற்சி எடுத்து, ஒரு தெளிவான திட்டத்துடன், நம்பிக்கையுடன் செயல்பட்டீர்களேயானால் வெற்றி உங்களுக்கே!

# DISCLAIMER

The information given in this training or course is only for educational purpose only: however, nothing presented in this training or course material is intended as or should be construed to be, a recommendation to buy or sell any specific security and neither an offer to invest or trade in any security, currency or commodity. Kiff Boss shall have no liability for any, direct or indirect, consequential or incidental damages or losing, arising out of the use of this information. Any losses incurred by traders unsucessful in applying these ideas or methods are the sole responsibility of the trader and will not have any connection with the company.

இந்த பயிற்சி அல்லது பாடக் கோப்புகளில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் கல்வி பயன்பாட்டிற்கு மட்டுமே. இந்த பயிற்சி அல்லது பாடக் கோப்புகளில் உள்ள தகவல்களை எந்த ஒரு குறிப்பிட்ட பங்கினையும் வாங்குவதற்கோ அல்லது விற்பதற்கோ அளிக்கப்படும் சிபாரிசுகளாக கருதக்கூடாது. மேலும் இந்த தகவல்களை கொண்டு கமாடிட்டி அல்லது கரன்சி அல்லது பங்குசந்தையில் முதலீடு செய்வதற்கோ அல்லது வர்த்தகம் செய்வதற்கோவான பரிந்துரைகளாகவோ அல்லது சலுகையாகவோ கூட கருதக்கூடாது. இந்த தகவல்களின் மூலம் ஏதேனும் பாதிப்போ அல்லது இழப்போ அல்லது நஷ்டமோ ஏற்பட்டால் அதற்கு கிஃப் பாஸ் அகாடெமி எந்த வகையிலும், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொறுப்பாகாது. இந்த பகுதியில் வழங்கப்பட்டுள்ள வழிமுறைகள் அல்லது கருத்துக்களைக் கொண்டு செயல்பட்டு வர்த்தகர்களுக்கு ஏதேனும் இழப்பு ஏற்பட்டால் அதற்கான முழு பொறுப்பும் வர்த்தகர்களையே சேரும், எவ்வித இழப்பிற்கும் எங்கள் நிறுவனத்தை தொடர்புப்படுத்த முடியாது. இனி வரும் பாடக்கோப்புகளையும் மற்றும் எங்கள் நிறுவனம் உங்களிடம் பகிர்ந்து கொள்ளும் அனைத்து அனுபவங்களையும் அறிவுக் தகவல்களாக மட்டுமே கருதி பொறுமையுடன் ஆராய்ந்து உங்கள் முடிவுகளை நீங்களாகவே எடுக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

# வர்த்தகத்தின் 9 இதயங்கள்

## பங்குதரகரை தேர்ந்தெடுத்தல்

## அடிப்படை பகுப்பாய்வு

## தொழில்நுட்ப பகுப்பாய்வு

## வர்த்தக திட்டம்

## நேரத்தின் முக்கியத்துவம்

## வர்த்தக மனநிலை

## ஆபத்து கையாளுகை

## தரவூட்டு

## தொழில்நுட்பத்தின் உதவி

பங்குசந்தை, கமாடிட்டி சந்தை மற்றும் கரன்சி சந்தை போன்ற பல சந்தைகள் இருந்தாலும், இவற்றில் எந்த சந்தையில் வர்த்தகம் செய்வது என்பது ஒருவரின் தனிப்பட்ட மனநிலையையும், பணப்பலத்தையும் பொருத்ததே. ஆனால் எந்த சந்தையில் நீங்கள் வர்த்தகம் செய்துக்கொண்டிருந்தாலும் சரி அதில் தொடர்ந்து வெற்றிகரமாக செயல்பட்டு சிறந்து விளங்க முக்கியமாக சில காரணிகளை கருத்தில் கொள்ள வேண்டியது அவசியம். இவற்றினை வர்த்தகத்தின் 9 இதயங்கள் என நாங்கள் அழைக்கின்றோம். இவைகளை இனி காணலாம்.

# பங்குதரகரை தேர்ந்தெடுத்தல்

முதலீட்டாளர்கள் இரண்டாம் நிலை சந்தையில் நிறுவனங்களிடம் நேரடியாக பங்குகளை வாங்கவோ விற்கவோ முடியாது. அனைத்து வர்த்தகமும் நடைபெற முடியும் என்பது விதிமுறை. ஆதலால் ஒரு பங்குதரகர் என்பவர் நிறுவனங்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் இடையில் இருந்து வர்த்தகத்தையும் கையாளப்போகும், உங்களுக்கு ஏற்ற சரியான தரகு நிறுவனத்தை தேர்ந்தெடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

## தரகரை தேர்ந்தெடுப்பதில் நீங்கள் கவனிக்க வேண்டியவை

- நீங்கள் வர்த்தகம் செய்ய தேர்ந்தெடுக்கும் தரகு நிறுவனம் செபியிடம் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
- டிரேடிங் அக்கவுண்ட் மற்றும் டீமேட் அக்கவுண்ட் ஆகிய இரண்டு கணக்குகளையும் துவங்குவதற்கான வசதிகள் அந்நிறுவனத்திடமே இருத்தல் வேண்டும்.
- அவர் வசூலிக்கும் தரகு தொகையானது அவர் அளிக்கும் வசதிகளுக்கேற்ப நியாயமாக இருத்தல் வேண்டும்.
- உங்கள் வசதிக்கு ஏற்றார்போல் எங்கிருந்து வேண்டுமானாலும் வர்த்தகம் செய்யவும் மற்றும் உங்கள் கணக்குகளை எப்போது வேணடுமானாலும் பார்வையிடவும் ஆன்லைன் வசதிகளை அந்நிறுவனம் அளித்திடவும் வேண்டும்.
- அந்நிறுவனத்தில் வேலை பார்க்கும் டீலர் (உங்கள் பங்குகளை உங்களுக்காக வாங்கி விற்பவர்) மிகவும் வேகமாக செயல்படுபவராகவும், திறமையானவராகவும் இருத்தல் வேண்டும்.
- உங்கள் வர்த்தகத்தற்கு உதவும் வகையில் அந்நிறுவனம் பகுப்பாய்வு யுக்திகளில் சிறந்தவர்களாக இருத்தல் வேண்டும்.
- ஒரு சிறந்த வர்த்தகராக மாற வேண்டும் என்றால் நீங்கள் மேற்கண்ட அனைத்து காரணிகளையும் கவனித்து உங்கள் தரகரை தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

# அடிப்படை பகுப்பாய்வு




அடிப்படை பகுப்பாய்வு என்பது உங்கள் முதலீடுகளை செய்வதற்கு பயன்படுத்தப்பட்டவேண்டிய பகுப்பாய்வு முறையாகும்.அதாவதுஒரு நிறுவனத்தின் செயல்பாடுகள், விற்பனை, வருமானம்,வளர்ச்சி, ஆற்றல், உடைமைகள்,கடன்கள்,நிர்வாகம்,தயாரிப்புகள் மற்றும் ஒரு நிறுவனத்தின் தனிபயனுடைய காரணிகள் போன்ற அனைத்து விவரங்களையும் கொண்டு ஒரு நிறுவனத்தின் தரத்தை மதிப்பிட்டு அதன்பின் முதலீட்டு முடிவுகளை எடுக்க உதவும் ஒரு வழிமுறை எனலாம்.

சந்தையில் வர்த்தகமாகும் ஒரு நிறுவனத்தின் பங்கானது சரியான விலையில் உள்ளதா என்பதை அடையாளம் காண அடிப்படை பகுப்பாய்வுபெருமளவில் உதவும். நீண்ட நாள் முதலீட்டாளர்களுக்கு இம்முறை அதிகளவில் பயன்தரும்.

ஒரு வெற்றிகரமான முதலீட்டாளர் தனது புதுவோலையில் (portfolio)ஒருபங்கை இணைப்பதற்கு முன்னால் அப்பங்கின் அடிப்படைகளை கண்டிப்பாக ஆராய்வார்.

# தொழில்நுட்ப பகுப்பாய்வு



தொழில்நுட்ப பகுப்பாய்வு என்பது விலை நகர்வுகளை கண்காணிக்கும் ஒரு வழிமுறையாகும், அதாவது கடந்து சென்ற விலை விவரங்களைக் கொண்டு எதிர்கால விலை நகர்வுகளை கணிக்க முற்படும் ஒரு வழிமுறை எனலாம். ஒரு நிறுவனத்தின் மதிப்பையோ அல்லது அடிப்படைகளையோ கருத்தில் கொள்ளாமல் அதன் விலை நகர்வுகள் மற்றும் வால்யூம் போன்ற விவரங்களை கொண்டு விலைகளின் போக்கை அடையாளம் கண்டு, மேலும் சில சூத்திரங்களை உருவாக்கி அதன்பின் வர்த்தக முடிவுகளை எடுப்பதே தொழில்நுட்ப பகுப்பாய்வின் முக்கியம்சம். வரைபட கலையின் உதவியோடு கேண்டில் ஸ்டிக் வடிவங்கள், இணைத்து ஒரு பங்கு அல்லது கமாடிட்டியின் நுழைவு மற்றும் வெளியேறும் விலைகளை கண்டறிந்துபயன்பெறலாம்.

சந்தையின் ஏற்ற இறக்கங்களுக்கு முக்கிய காரணங்களாக விளங்கும் முதலீட்டாளர்களின் மனநிலையை புரிந்துக்கொள்ள தொழில்நுட்ப பகுப்பாய்வு பெருமளவில் உதவுவதால், ஒரு சிறந்த வர்த்தகர் தொழில்நுட்ப பகுப்பாய்வை மேற்கொள்ளாமல் கண்மூடித் தனமான கண்டிப்பாக செய்யமாட்டார்.

# வர்த்தக திட்டம்

சரியான திட்டம் இல்லா எந்தவொரு செயலும் நினைத்த இலக்கை அடைவதில்லை என்பது நீங்கள் அறிந்ததுதான். ஒரு சரியான வர்த்தக திட்டத்தை உருவாக்க ஒரு வர்த்தகர் சில கோட்பாடுகளைபின்பற்ற வேண்டியது அவசியம். அவை

- உங்களின் மனநிலையை நீங்கள் தெளிவாக புரிந்தக்கொள்வது. சந்தை துவங்கும் முன்னரே நீங்கள் அன்று செய்யப்போகும் வர்த்தகத்திற்கான ஆய்வுகளை மேற்கொள்வது.
- நீங்கள் வர்த்தகம் செய்யப்போகும் ஒரு பங்கையோ அல்லது கமாடிட்டியையோ தேர்ந்தெடுப்பதற்கான ஒரு சரியான வழிமுறையை பின்பற்றுவது.
- நன்கு பரிசோதிக்கப்பட்ட ஒரு யுக்தியை உபயோகித்து நீங்கள் தேர்ந்தெடுத்த பங்கின் நுழைவு மற்றும் வெளியேறும் விலையை முன்கூட்டியேநிர்ணயித்தக்கொள்வது
- லாபம் மற்றும் நஷ்டம் ஆகிய இரண்டிற்கும் சரியான விகிதத்தை முன்கூட்டியே தீர்மானித்துக் கொள்வது. லாபமோ நஷ்டமோ அதை சரியான நேரத்தில் நிறைவேற்றி வெளியேறுவது.
- உங்கள் வர்த்தகத்தின் வெற்றி சதவீதங்களை சரியாக அளந்து தவறுகள் ஏதேனும் இருந்தால் அதை அவ்வப்போதே சரிசெய்து மெருகேற்றி கொள்வது.
- உங்கள் தீர்மானங்களில் இருந்து மாறாமல் அதை கடைப்பிடிப்பது.

போன்றவைகள் அனைத்திலும் கவனம் செலுத்துவதின் மூலம் நீங்கள் ஒரு சரியான வர்த்தகத்த திட்டத்தை உருவாக்கி, ஒரு சரியான பங்கிலோ அல்லது கமாடிட்டியிலோ சரியான நேரத்தில் லாபங்களை வெளியெடுக்க முடியம்.

ஒரு சிறந்த வர்த்தகர் என்பவர், பகுப்பாய்வுகளை மேற்கோண்டு அதன்பின் பலரால் முன்பே கண்டுபிடிக்கப்பட்ட சூத்திரங்களை தேர்ந்தெடுத்த அல்லது அவராகவோ ஒரு புதிய சூத்திரத்தை உருவாக்கியோ, அதை உபயோகித்து அவருக்கென ஒரு யுக்தியை வடிவமைப்பார். அதன்பின் அந்த யுக்தியை கடந்து சென்ற விலை நகர்வுகளில் நன்கு பரிசோதித்து அந்த யுக்தியின் வெற்றி சதவீதங்களை அளவிட்டு திருப்தி பெற்றபின், அவரது முதலீட்டிற்கும் நேரத்திற்கும் ஏற்ப சரியான ஒரு வர்த்தக திட்டத்தினபடி அவருக்கு பங்குகள் கிடைக்கப்பெற்றால் மட்டுமே வர்த்தகம் செய்து,தேவையற்ற பயங்களைவிடுத்து நம்பிகையுடன் செயல்படுவார்.

# நேரத்தின் முக்கியத்துவம்



வர்த்தகத்தில் மிக முக்கிய பங்குவகிப்பது நேரம். மிகக்கடுமையான ஆய்விற்கு பிறகு அருமையான ஒரு வர்த்தக திட்டத்தை உருவாக்கி அதை பயன்படுத்தும் தருணத்தில் நேரம் தவறிவிட்டால், அனைத்தும் வீணாகும்.அதை மீறி,நேரம் தாழ்த்தி உங்கள் திட்டத்தை மாற்றியமைத்தால் அதன் வலிமையும், வெற்றி சதவீதமும் குறைய நேரிடும்.ஆதலால்நேரத்தின் முக்கியத்துவத்தை நீங்கள் கண்டிப்பாக புரிந்துக்கொள்ளுதல் அவசியம்.

ஒரு சிறந்த வர்த்தகர் தொலைப்பேசியின் மூலம் வர்த்தகம் செய்வதைத் தவிர்த்து தன் சொந்த கணிணியில் தானே வர்த்தகங்களை செய்து குழப்பமில்லாமல் லாபம் அடைவார்.

# வர்த்தக மனநிலை



அனைத்து வர்த்தகத்திலும் விலைகளை மேலும் கீழுமாய் விரட்டும் பெரும் சக்தி வர்த்தகரின் மனநிலைதான் எனலாம்.தொடர்ந்து மேலும் கீழுமாய் வேகமாய் நகரும் விலைகளை ஒரு புதிய வர்த்தகர் கண்டு வியந்து அதன்பின் கோடிஸ்வரன் கனவு கொண்டு சந்தைக்கு அடிமையாகி கண்மூடித்தனமான வர்த்தகத்தை செய்து வர்த்தகத்தை செய்து நஷ்டமடைந்துவிடுவார். அதன்பின் பங்குவர்த்தகத்தை குறைகூறிக் கொண்டோ இல்லை அதிக கர்வத்தோடோ அல்லது பயத்தோடோ, மாறி மாறி செயல்பட்டு தொடர்ந்து நஷ்டத்தையே அடைவார்.

ஆனால் ஒரு சிறந்த வர்த்தகர் என்பவர் சந்தையின் அடிப்படைகளையும்,தொழில்நுட்பங்களையும் மற்றும் ஒழுக்கமான வர்த்தக முறைகளின் முக்கியத்துவத்தையும் புரிந்துக்கொண்டு பங்குவர்த்தகத்தை தற்காலிகமாக நிறுத்திவிட்டு ஒரு தெளிவான வர்த்தக திட்டத்தை உருவாக்கி அதை நீண்ட நாள் பரிசோதித்து அதன்பின் பொறுமையாக மறுபடியம் பங்குவர்த்தகதத்தில் நுழைந்து தெளிவாக செயல்பட்டு, லாபங்களை ஈட்டத் தொடங்குவார்.

# ஆபத்து கையாளுகை

பங்குவர்த்தகர்கள் பொதுவாக நான்கு வகைபடுவர்.

பெரிய லாபம் ஈட்டுபவர்.

சிறிய லாபம் ஈட்டுபவர்

சிறிய நஷ்டம் அடைபவர்

பெரிய நஷ்டம்

அனைத்து புதிய வர்த்தகர்களும் மேற்கண்ட வகைகளில் முதல் வகையில் இருக்கத்தான் விரும்புவார்கள். அதனால், அதன் மீதுதான் அதிக கவனம் செலுத்துவார்கள். ஆனால், நாங்கள் உங்கள் கவனத்தை கீழிருந்து மேல் நோக்கி செலுத்தச்சொல்லி கேட்கிறோம். ஏனென்றால் முதலில் நீங்கள் மிகப்பெரிய நஷ்டம் அடைவதை தவிர்க்க வேண்டும். பங்குவர்த்தத்தில் நஷ்டம் ஒரு அங்கம் என்றாலும் கூட அது மிகப்பெரிய நஷ்டமாகும் வரை வேடிக்கை பார்ப்பது வர்த்தகமானது தவறாகசெல்வதை உணர்ந்தீர்கள் என்றால் அதிலிருந்து உடனடியாக வெளியேறுவதுதான் நல்லது.நஷ்டத்தடுப்பு முறையை தவறாமல் கடைப்பிடித்தால் நீங்கள் பெரிய நஷ்டமடைவதை முதலில் தவிர்க்கலாம். நஷ்டத்தடுப்பு முறையை கேலி செய்யும் பல புதிய வர்த்தகர்கள் உண்டு. அதன் காரணம் இவர்கள் பயன்படுத்திய நஷ்ட தடுப்புகள் பல முறை அடையப்பட்டிருப்பதே ஆகும்.நஷ்டத்தடுப்பும் லாபத்திற்கான இலக்கும் சமமான முக்கியத்துவத்தை கொண்டவைதான். இவ்விரண்டினையம் சரியான ஆய்வுகளை செய்யாமல் மனதிற்கு தோன்றிய விலையில் நிர்ணயித்து செயல்பட்டால், அது பயன்தராது. சரியான ஆய்வுகளை மேற்கொண்டு துல்லியமான நஷ்டத்தடுப்பினை நிர்ணயித்து பழகும் போது, பெரும் நஷ்டம் அடைவதை தவிர்த்து, நஷ்டத்தடுப்பின் அளவை லாபத்தை ஈட்டத் துவங்கலாம். அதன்பின் அனுபவத்தின் அடிப்படையில் பெரும் லாபம் ஈட்டும் சிறந்த வர்த்தகராக நீங்கள் மாற முடியும்.

# தரவூட்டு



அனைத்துசந்தைகளிலும்வர்த்தகமாகும்பங்குகள்,பொருட்கள் போன்றவைஅனைத்தின் விலைகளும் நொடிக்குநொடி தொடர்ந்துமேலும் கீழுமாய் நகரும் தன்மை வாய்ந்தவை. இவ்வனைத்து நகர்வுகளும்சந்தை துவங்கியதுமுதல் இன்று வரை அந்தந்த பங்குமாற்றகத்தால் பதிவுசெய்யப்படுகின்றது. தொழில்நுட்ப பகுப்பாய்வு எனும் வரைபடகலைஉருவாவதற்கான அடிதளம் இவ்வகை டேட்டா(DATA)எனும்தரவூட்டுகள்தான். ஏனெனில் இவ்வகை விலை தகவல்கள் இல்லாமல் தொழில்நுட்ப பகுப்பாய்வினை மேற்கொள்ள முடியாது. வரைபடகலையைமென்பொருட்கள் மூலமாகவோ அல்லது கையால் வரைந்தோ எவ்விதத்தில் பயன்படுத்தமுயற்சித்தாலும் அதற்கு னயவய அவசியம்.ஆதலால்,ஒருவர்எவ்வளவுதான் தலைசிறந்த பகுப்பாய்வாளராக இருந்தாலும் சரி,அவர்பயன்படுத்தும்டேட்டாவானது துல்லியம் இல்லாமல்போனால்அவர்முடிவுகள்தவறாகத்தான்அமையும்.

இதை தெளிவாக புரிந்துக்கொண்ட ஒரு சிறந்த வர்த்தகர், தான் உபயோகப்படுத்தும் டேட்டாவினை பரிசோதித்த பிறகுதான் அதனினை பயன்படுத்துவார்

# தொழில்நுட்பத்தின் உதவி



நம் வாழ்க்கை முறையில் பெருமளவு மாற்றத்தை தினமும் உருவாக்கிக் கொண்டிருப்பது புதிது புதிதாய் கண்டுபிடிக்கப்படும் தொழில்நுட்பங்கள்தான் என்பது நீங்கள் அறிந்ததே. நாம் தினமும் பயன்படுத்தும் தொலைபேசியில் துவங்கி விண்வெளிக்கு செல்லும் விண்கலன்கள் வரை தொழில்நுட்பமானது நமக்கு அளிக்கும் வசதிகள் ஏராளம். இப்படிப்பட்ட தொழில்நுட்பம் பங்குவர்த்தகம் செய்வதிலும், அதை பராமரிப்பதிலும் மற்றும் மெருகேற்றிக் கொள்வதிலும் பெருமளவில் உதவுகின்றது.

வீட்டில் இருந்தபடியே வேகமாக பங்குவர்த்தகம் செய்ய பங்குவர்த்தக மென்பொருள்(), பகுப்பாய்வுகளை எளிதாக மேற்கொள்ள பல சூத்திரங்களையும், யுக்திகளையும் உள்ளெழுப்பயே உருவாகி வெளியாகும் பலவகை தொழில்நுட்ப பகுப்பாய்வு மென்பொருட்கள்() ,சரியான நேரத்தை தவறவிடாமல், ஒரு வர்த்தகரின் சுய மனப்போராட்டங்களால் எடுக்கப்படும் உணர்வு சார்ந்த முடிவுகளை தவிர்த்து, தான் உருவாக்கிய திட்டத்தை சரியாக செயல்படுத்த உபயோகிப்படும் தானியங்கி வர்த்தக மென்பொருட்கள்( ), பங்கு மாற்றகத்தில் இருந்து வெளியாகும் வரலாற்று தரவூட்டுகள் ( ) மற்றும் நிகழ் நேர தரவூட்களை (Historical Data) நேரம் சிதறாமல் உங்கள் கணிக்கே துல்லியமாக கொண்டு வந்து சேர்க்கும் டேட்டா ( ) மென்பொருட்கள் போன்ற பலவகை பயன்பாட்டிற்கு தொழில்நுட்பங்கள் இன்றைய காலகட்டங்களில் பெருமளவில் உதவுகின்றன.

ஒரு சிறந்த வர்த்தகர் தன் ஆய்வுகளையும் வர்த்தகத்தையும் துல்லியமாக நிறைவேற்ற, தன்னால் இயன்ற வரை அனைத்து தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தி வெற்றி பெறுவார்.

# நீங்களும் சிறந்த வர்த்தகர்தான்

நீங்கள் இதுவரை கண்ட வர்த்தகத்தின் 9 இதயங்களை சரிவர புரிந்துகொண்டு, உங்கள் வர்த்தகத்தை செய்யத் துவங்கினால் நீங்களும் சிறந்த வர்த்தகர்தான்....

# DISCLAIMER

The information given in this training or course is only for educational purpose only: however, nothing presented in this training or course material is intended as or should be construed to be, a recommendation to buy or sell any specific security and neither an offer to invest or trade in any security, currency or commodity. Kiff Boss shall have no liability for any, direct or indirect, consequential or incidental damages or losing, arising out of the use of this information. Any losses incurred by traders unsucessful in applying these ideas or methods are the sole responsibility of the trader and will not have any connection with the company.